சுருக்கம்

முதலமைச்சர் பொது நிவாரண நிதி – சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை வட்டம், திருவிடைமருதூர் கிராம அங்கன்வாடி மைய உதவியாளர் திருமதி. நாகலெட்சுமி பாம்பு தீண்டி இறந்தமைக்காக அவரது குடும்பத்தினருக்கு மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ₹3.00 இலட்சம் நிதியுதவி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–2) துறை

அரசாணை (ப) எண். 59

நாள். 20.04.2015
திருவள்ளுவராண்டு 2046
மன்மத, சித்திரை 7

படிக்கப்பட்டது:

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.3709/2015, நாள் 24.02.2015.

-------

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை வட்டம், திருவிடைமருதூர் கிராம அங்கன்வாடி மையத்தில் உதவியாளராக பணிபுரிந்து வந்த திருமதி. நாகலெட்சுமி என்பவர் 22.02.2015 அன்று போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணி மேற்கொண்டு பின்னர், காலை 11.30 மணியளவில் அவரது வீட்டில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த போது பாம்பு தீண்டியதில் உடல்நிலை பாதிக்கப்பட்டு நீர்முளையிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் அங்குள்ள மருத்துவரின் அறிவுரையின்படி திருத்துறைபூண்டி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். இறந்த அங்கன்வாடி உதவியாளர் திருமதி. நாகலெட்சுமி 15 ஆண்டுகளாக அவரது கணவர் திரு. சுரேஷ் கண்ணனிடமிருந்து பிரிந்து வாழ்ந்துள்ளார். அவர்களுக்கு ஹரிஹரன் என்ற 19 வயது மகன் உள்ளார். அவர் நாகப்பட்டினம் பாப்பா கோவில் சர் ஐசக் நியூட்டன் கல்லூரியில் முதலாமாண்டு பயின்று வருகிறார். இந்நிகழ்வு, குறித்து தலைஞாயிறு காவல்நிலையத்தில் 22.02.2015 அன்று குற்ற எண்.33/5 இந்திய தண்டனை சட்டப் பிரிவு 174–இன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு திருத்துறைபூண்டி அரசு பொது மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு 23.02.2015 பிற்பகல் 4.00 மணியளவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், இறுதி சடங்கு பணிகளை மேற்கொள்வதற்காக குடும்ப நல நிதி ₹1,50,000–லிருந்து அவசர நிதியாக ₹5,000 வழங்கப்பட்டு விட்டது எனவும், மீதித்தொகை ₹1,45,000 பின்னர் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. அங்கன்வாடி மைய உதவியாளர் திருமதி. நாகலெட்சுமி பாம்பு தீண்டி இறந்ததைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் "இந்நிகழ்விற்காக அரசின் வேறு எந்த

திட்டத்தின் கீழும் நிதியுதவி எதுவும் பெற்றிருத்தல் கூடாது'' என்ற நிபந்தனையுடன், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ₹3,00,000 (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிக்கப்பட்ட ₹3,00,000 (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)ற்கான காசோலையை, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கும்படி அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை காசோலையாகவோ அல்லது அஞ்சலக சேமிப்பு வங்கி கணக்கு மூலமாகவோ அங்கன்வாடி மைய உதவியாளர் திருமதி. நாகலெட்சுமி குடும்பத்தினருக்கு வழங்கி, அவர்களிடமிருந்து வரிவில்லையிட்ட பற்றுச்சீட்டைப் பெற்று நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறும் மேலும், இது குறித்து அரசின் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறைக்கு தெரியப்படுத்தும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 22132/CMPRF/2015, நாள் 15.04.2015 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்
நிதி (மு.பொ.நி.நி) துறை, சென்னை – 600 009 (3 படிகள்)
மாவட்ட ஆட்சித் தலைவர்,நாகப்பட்டினம் மாவட்டம்,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009
மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009
இருப்பிட கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை –600 009

நகல்

நிதி (சந) (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி) துறை, சென்னை –600 009
இருப்பிட கணக்கு அலுவலர், (சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந2) துறையின் வழியாக)
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சந2) த்துறை, சென்னை –600 009
இருப்பு கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

20/04/2015
பிரிவு அலுவலர்
20/04/15